# <u>DEPOSITION OF WITNESS</u>

**In the court of Sub Court, Eraniel**
**S.C.No.217/2022**
**Prosecution Witness - PW8**

| | |
|---|---|
| Name | : திரு. கே.எஸ். பாலமுருகன். |
| Father's Name | : |
| Age | : |
| Calling | : |
| Village | : |
| Taluk | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 07.01.2025.
(Accused is present)

<u>முதல் விசாரணை</u>–

நான் தற்போது தென்காசி மாவட்டம், செங்கோட்டை வட்ட ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். 03.08.2010 அன்று குளச்சல் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்த போது அன்றைய தினம் மாலை 04.30 மணிக்கு மேற்கு நெய்யூர், சந்தன வேதக்கண் என்பவர் எதிரி மற்றும் அவர் ஊர்க்காரர்களுடன் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவைப் பெற்று குளச்சல் காவல் நிலைய குற்ற எண்.259/2010 இ.த.ச. பிரிவு 450, 394 மற்றும் 398 பிரிவுகளின் படி வழக்கு பதிவு செய்தேன். நான் பதிவு செய்த முதல் தகவலறிக்கை அ.சா.ஆ.7. அசல் புகார் மனு மற்றும் முதல் தகவலறிக்கையை கனம் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், இரணியல் அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். இதர நகல்களை சம்மந்தப்பட்ட உயரதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தேன். ஒரு நகலை விசாரணை அதிகாரியான ஆய்வாளர். திரு. கந்தக்குமார் அவர்களது விசாரணைக்கு வைத்தேன். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

பொதுவாக முதல் தகவலறிக்கை பதிவு செய்யும் போது, அதில் பதிவு செய்யும் காவலரின் பெயர், எண் மற்றும் அவருடைய கையொப்பம் அதில்

பதிவு செய்யப்படும் என்றால், சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.7 முதல் தகவலறிக்கையில், எனது பெயர், எண் மற்றும் என்னுடைய கையொப்பம் இல்லை என்றால், சரிதான்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
**இரணியல்.**